மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இதற்கு பலமுறை பதில் சொல்லிவிட்டேன் என்றே கருதுகிறேன். நிதியாதாரம்தான் அடிப்படை, அதிகமாக இருந்தால் அதிகரித்துக் கொடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறது.

Irrigation facilities under Parambikulam-Aliyar Project.

* 344 Q.—Thiru K. KANDASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state :—

(a) whether the Government are aware of the fact that the extension of Parambikulam-Aliyar Project in Palladam which was sanctioned by previous Government was stayed during emergency; and

(b) whether there is any proposal to revive the said scheme in Palladam area considering the drought condition prevailing in that area ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்தை நிறைவேற்றுவதுபற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. செ. சதாசிவம் : பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் இந்தத் திட்டத்தை ஆரம்பித்து அவர்கள் காலத்திலேயே இந்தத் திட்டத்தை விஸ்தரிக்கின்றபோது திருச்சி ஜில்லாவிலுள்ள கரூர் தாலுக்காவும் இதில் பயனடையும் என்று உறுதியைக் கொடுத்தார்கள். அப்போது மராமத்து இலாக்கா அமைச்சராக இருந்த திரு. ராமையா அவர்கள் காங்கேயத்திலே ஒரு மகாநாடு போட்டு அந்த மகாநாட்டிலே இந்த உறுதிமொழியை உறுதியாக்கினார்கள். இந்தத் திட்டம் பரிபூரணமாக கோவை ஜில்லாவிலே பயன் கொடுக்கிறது. கரூர் தாலுக்கா மிக வறண்ட பிரதேசமாக இருப்பதனால் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கியுள்ள நிதியின் மூலமாக கரூர் தாலுக்காவும் பயன் பெற அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே அவர் எதிர்பார்த்தது 32 டி.எம்.சி ஆனால் நமக்குக் கிடைத்தது 23 டி.எம்.சி. தான்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த பரம்பிக்குளம் ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் கவர்னர் அவர்களின் ஆட்சியின் போது ஒத்திவைக்கப்பட்ட இதற்காக நம்முடைய அமைச்சர் அவர்களும் பட்ஜெட்டிலே ஒதுக்கி இருக்கிறார்கள். இந்த

1978 மார்ச் 2]

விஸ்தரிப்புத் திட்டத்தை எதிர்த்து ஹைக்கோர்ட்டிலே வழக்கு தொடரப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, இது உண்மையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியே இதற்குத் தூண்டுதலாக அமைந்துவிடக் கூடாது. அப்படி எதுவும் இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பல்லடம் பகுதிக்கு விஸ்தரிக்கப்படயிருக்கும் இந்தத் திட்டம் திருப்பூர் சூலூர் பிரதேசங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை விஸ்தரிப்பதன் மூலம் பயன் பெறும் தாலுக்காக்கள் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, பல்லடம், தாராபுரம் ஆகியவையாகும்.

* 345 வினா—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட வாய்க்கால் மூலம் செட்டிபாளையம் (மதுக்கரை ஒன்றியம்) குட்டைக்கு நீர் விடும் திட்டம் கைவிடப்பட்டதற்கான காரணம் யாது ?

(ஆ) மீண்டும் அதனைச் செயல்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் ஆயக்கட்டு பகுதிக்கே போதிய தண்ணீர் இன்மையாலும், இத்திட்டம் நிறைவேற்றப்பட அதிகப்படியான தொகை செலவு செய்யப்பட வேண்டியுள்ளது என்ற காரணம் கருதியும் கைவிடப்பட்டது.

(ஆ) இல்லை.

திரு. கு. ரமணி : பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் போதிய அளவு தண்ணீர் இல்லை என்ற விடையை அமைச்சரவர்கள் தந்தார்கள். பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் எவ்வளவு தண்ணீர் நமக்கு மொத்தமாகக் கிடைக்கும் என்பதற்கு கேரள-தமிழக அரசுகளிடையே பேச்சுவார்த்தை இறுதிப்படுத்தப்பட்டு முடிவு ஆகி உள்ளதா ? இன்னும் தண்ணீர் கிடைப்பதற்கு பாத்தியதை உண்டா ? அப்படியானால் எப்போது கிடைக்கும் ?